சார்பு நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை: – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, குளித்தலை.

2025–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 01 ஆம் தேதி செவ்வாய்கிழமை

இ.ம.எண்.5/2025, இ.ம.எண்.02/2023 in அ.வ.எண்.225/2022

1) K. வாசு

2) V.கார்த்திக் . . . மனுதாரர்கள்/ 2, 3 ம் எதிர்மனுதாரர்கள்

**/எதிர்/**

சக்திவேல், . . . எதிர்மனுதாரர் /மனுதாரர் / கோருரிமையாளர் /3 ம் நபர்

**உத்தரவு**

மனுதாரர்கள் தரப்பில் இம்மனு கட்டளை 9 விதி 7 சி.பி.சி ன்படி கடந்த 06.01.2025 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் : 24.06.2025

இறுதி விசாரணை செய்த நாள் : 25.06.2025

உத்தரவு பகரப்பட்ட நாள் : 01.07.2025

மனுதாரர்கள்/

2,3 ம் எதிர்மனுதாரர்களுக்காக : திரு.R.M.செந்தில் –வழக்கறிஞர்

எதிர்மனுதார் / மனுதாரர் /

கோருரிமையாளர் / 3 ம் நபருக்காக : திரு.M.தமிழ்செல்வன் – வழக்கறிஞர்

1.மனுவின் சுருக்கம்

இம்மனுவின் இரண்டாவது மனுதாரர் முதல் மனுதாரருக்காகவும், இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் மீது

வாதியிடம் பெற்ற கடனுக்காக மனுதாரர்கள் மீது அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் இம்மனுவின் எதிர்மனுதாரர் / மூன்றாம் நபர் பற்றுகையை நீக்க வேண்டும் என  மனு செய்ய மேற்படி மனுவின் மனுதாரரின் தகப்பனாருக்கு வயது முதிர்வின் காரணமாக உடல்நிலை பாதிப்படைய அதனால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலாமல் போய்விட  அன்றை தினம் வக்காலத்து தாக்கல் செய்யாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக கடந்த 06.01.2025 ம் தேதி  ஒரு தலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட மேற்படி ஒரு தலைபட்ச உத்தரவினை ரத்து செய்யக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர் / மூன்றாம் நபர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்

மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளக்கூடிய சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது.  மனுதாரர்கள் அசல் வழக்கினை கட்சி செய்யாமல் எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் எந்த விதமான உத்தரவுகளையும் பெற்றுவிடக்கூடாது என்றும், வழக்கினை இழுத்தடிக்கவேண்டும் என்கின்ற கெட்ட எண்ணத்திலும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதால், இம்மனுவினை எதிர்மனுதாரர் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என கோரியுள்ளார்.

3. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர்கள் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின்

வாயிலாக நிருபணம் செய்துள்ளதால், மனுதாரர்கள் கோரிய பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

5. எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களுடைய வாதுரையில் மனுதாரர் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிருபணம் செய்யவில்லை என்பதால் மனுதாரர்கள் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என வாதிட்டார்.

6. தீர்வு

(அ) ஒரு யோகநாதன் என்பவர் மனுதாரர் / வாதியாக இருந்து வாசு மற்றும் கார்த்திக் ஆகிய இரண்டு எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் மீது அவர்கள் பெற்ற கடன் தொகையினை திரும்ப செலுத்தாத காரணத்தினால் மேற்படி தொகையை வசூலிக்க கோரி அசல் வழக்கு தாக்கல் செய்த காலகட்டத்திலேயே மனுதாரர் / வாதியானவர், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்யகோரி இ.ம.01/2022 என மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 14.09.2022ம் தேதி அனுமதிக்கப்பட்டு மேற்படி சொத்தானது பற்றுகை செய்யப்பட்டுள்ளது.

(ஆ) ஒரு சக்திவேல் என்கின்ற மூன்றாம் நபர் அவருக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தினை இந்நீதிமன்றம் பற்றுகை செய்துவிட்டபடியாலும் ஆகையால் இ.ம.01/2022 மனுவில் இரண்டாவது இலக்க சொத்தை பொறுத்து பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்யகோரியும், மேற்படி பற்றுகையை நீக்கம் செய்யகோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது இ.ம. 02/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட மேற்படி மனுவில் அசல் வழக்கில் இரண்டு மற்றும் மூன்றாவது பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் போய்விட அவர்களுக்கு எதிராக கடந்த 06.01.2025ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யகோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ள கூடியவையாகவும், நம்பதகுந்ததாகவும் உள்ளது. எனவே, இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. தரப்பினர்களுக்கு அவர்களின் வழக்கினை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டியது அவசியம். எனவே, இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில்கொண்டு இம்மனுவானது அனுமதிக்கலாம் என முடிவுசெய்யப்படுகிறது.

முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்துத்தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 01-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவனம்: இல்லை.

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவனம்: இல்லை.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி,
குளித்தலை.